**செய்தி வெளியீடு எண்: 699** **நாள்: 23.11.2012**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று **(23.11.2012)** தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைரவிழாவினையொட்டி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை குழுக் கூட்ட அறையில் அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியினை திறந்து வைத்தார்கள்.

இந்திய நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, இந்திய அரசமைப்பு சட்டத்தின்படி, **1952**–ஆம் ஆண்டு அமைக்கப் பெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இந்த ஆண்டு **60** ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதை அடுத்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைரவிழா சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் **30.11.2012** அன்று மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் கே. ரோசய்யா அவர்கள் தலைமையிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையிலும் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது. இந்த விழாவில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைரவிழாவினையொட்டி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை குழுக் கூட்ட அறையில் சட்டமன்றப் பேரவையின் வரலாற்று நிகழ்வுகள் குறித்த புகைப்படக் கண்காட்சியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்து பார்வையிட்டார்கள்.

இந்தப் புகைப்படக் கண்காட்சியில் முதலமைச்சர்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர்கள், முக்கியத் தலைவர்கள், சட்டமன்றத்தில் முதலமைச்சர்கள் உரையாற்றுதல், முதலமைச்சர்கள் ஆளுநர் முன் பதவியேற்கும் நிகழ்ச்சிகள், புனித ஜார்ஜ் கோட்டையின் பல்வேறு தோற்றங்கள், அமைச்சரவைகள், முக்கிய சட்டமன்ற நிகழ்வுகள், ஆளுநர்கள் பேரவையில் உரையாற்றுதல், பேரவையில் நிதிநிலை அறிக்கையினை தாக்கல் செய்தல், முதலமைச்சர்கள் வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களை சந்தித்தல் உள்ளிட்ட பல்வேறு புகைப்படங்கள் இக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ள இப்புகைப்படக் கண்காட்சி **30.11.2012** வரை நடைபெறும். சிறப்பு மிக்க இக்கண்காட்சியினை பொதுமக்களும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளும் **28.11.2012** வரை பார்வையிடலாம். நாள்தோறும் காலை **11.00** மணி முதல் மாலை **5.00** மணி வரை இந்த புகைப்படக் கண்காட்சியினைக் காண அனுமதிக்கப்படுவர்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சட்டமன்றப் பேரவை துணைத் தலைவர், அரசு தலைமைக் கொறடா, தலைமைச் செயலாளர், சட்டப்பேரவைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 23.11.2012